கோரிக்கை எண். 4—தமிழ்நாடு பொது விற்பனை வரிகள், ஏனைய வரிகள், தீர்வைகள் நிருவாகம்.

## 1. முன்னுரை :

வணிக வரித் துறைத், தலைமைச் செயலகத்திலுள்ள வணிக வரிகள் மற்றும் அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்ற மூன்று துறைகளுள் ஒன்றாகும். வணிக வரி ஆணையர் வணிக வரித் துறையின் தலைவராவார். அவருக்கு உதவியாக தலைமை அலுவலகத்தில் வணிக வரி இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள் மற்றும் உதவி ஆணையர்கள் உள்ளனர். களப்பணிகளில், இவருக்கு உதவ துணை ஆணையர்கள் (ஆட்சிப் பகுதி), இணை மற்றும் துணை ஆணையர்கள் (செயலாக்கம்) உள்ளனர். வணிக வரித் துறை பின்வரும் வரி விதிப்புச் சட்டங்களை நிருவகித்து வருகிறது:—

(1) தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம்.

(2) தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டம்.

(3) தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு விற்பனை வரிச் (மேல்வரி) சட்டம்.

(4) 1956-ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம்.

(5) தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டம்.

(6) தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதிச் சட்டம்.

(7) தமிழ்நாடு 1935-ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டம்.

(8) தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு ஓட்டல்கள் மற்றும் தங்கும் விடுதிகளில் ஆடம்பர வசதிகள் மீதான வரிச் சட்டம்.

(9) தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு விளம்பர வரிச் சட்டம்.

(10) தமிழ்நாடு 1990-ஆம் ஆண்டு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவின் மீதான வரிச் சட்டம்.

மாநில அரசுக்கு கிடைக்கின்ற வருவாயில் பெரும்பகுதி, அதாவது மொத்த வருவாயில் சுமார் 70 சதவீதம், வணிக வரிகள் வாயிலாகக் கிடைக்கிறது. 1992-93-ஆம் ஆண்டுக்கு எதிர்பார்க்கப்படும் வருவாயான ரூ. 2,800 கோடியில் 1993 பெப்ரவரி முடிய (28-2-1993 வரை) ரூ. 2736.55 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. 1991-92-ஆம் ஆண்டில் ரூ. 2575.70 கோடி ரூபாயும், 1990-91-ஆம் ஆண்டில் ரூ. 2167.16 கோடி ரூபாயும் வசூலிக்கப்பட்டது.

2. வணிகவரித் துறையின் வருவாயும், செலவும் வருமாறு :

| ஆண்டு. | வருவாய். | செலவு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் கோடியில்) | |
| 1988-89 | 15,02.73 | 20.77 |
| 1989-90 | 17,59.02 | 23.28 |
| 1990-91 | 21,67.16 | 26.30 |
| 1991-92 | 25,75.70 | 31.86 |
| 1992-93 (28-2-1993 வரை) | 27,36.55 | 28.18 (1992 டிசம்பர் வரை.) |

3. வணிகவரித்துறை நான்கு பிரிவுகளாகச் செயல்படுகிறது.

அவையாவன :— (i) வரி மதிப்பீட்டுப் பிரிவு.
(ii) மேல்முறையீட்டுப் பிரிவு.
(iii) செயலாக்கப் பிரிவு.
(iv) தணிக்கைப் பிரிவு.

(i) வரி மதிப்பீட்டுப் பிரிவு :

இம்மாநிலத்தில் தற்போது 312 வரி விதிப்பு வட்டங்கள் உள்ளன. இவற்றுள் 92 வட்டங்கள் துணை வணிக வரி அலுவலர்கள் தலைமையிலும், 214 வட்டங்கள் வணிக வரி அலுவலர்கள் தலைமையிலும் ஏனைய 6 வட்டங்கள் வணிக வரி உதவி ஆணையர்கள் தலைமையிலும் இயங்குகின்றன. 1992-93-ஆம் ஆண்டில், துணை வணிக வரி அலுவலரால் நிர்வகிக்கப்பட்டு வந்த 10 வரி விதிப்பு அலுவலகங்கள் வணிக வரி அலுவலரால் நிர்வகிக்கப்படும் அலுவலகங்களாக நிலை



உயர்வு செய்யப்பட்டன. இம்மாநிலத்தில் 36 வணிக வரி நிர்வாகச் சரகங்கள்/வணிக வரி மாவட்டங்கள் (C.T. District) இருந்தன. தேவைக்கேற்பவும், நிதிநிலைமைக்கேற்பவும் புதிய சரகங்கள்/வரிவிதிப்பு வட்டங்கள் போன்ற வரி நிர்வாகப் பிரிவுகள் பெருகிவரும் வேலைப்பளுவைச் சமாளிக்கப் படிப்படியாக ஏற்படுத்தப்படுகின்றன. கோயம்புத்தூர் கோட்டத்தில் இரண்டு சரகங்களும், திருநெல்வேலிக் கோட்டத்தில் ஒரு வணிக வரிச் சரகமும் (C.T. District) சீரான நிருவாகம் நடைபெறும் பொருட்டு, இரண்டாகப் பிரிக்கப்படுவதற்கு தெரிந்தெடுக்கப்பட்டன. கோயம்புத்தூரில் ஒன்றும், சிவகாசியில் ஒன்றுமாக, இரு வணிக வரி சரகங்கள் உதவி ஆணையர்கள் தலைமையில் 1992-93-ஆம் ஆண்டில் புதிதாக ஏற்படுத்தப்பட்டன. ஒரு வணிக வரி அலுவலர், ஒரு துணை வணிக வரி அலுவலர், ஒரு உதவியாளர் மற்றும் ஒரு இளநிலை உதவியாளர் கொண்ட ஒரு தணிக்கைப் பிரிவை இவ்விரு புதிய வணிக வரிச் சரகங்களுக்கென்று அமைக்க அமைதி அளிக்கப்பட்டுள்ளது.

1993-94-ஆம் ஆண்டில் வரி வருவாயை அதிகரிப்பதற்காகவும் வரி விதிப்பு அதிகாரிகளைச் செவ்வனே மேற்பார்வையிட்டுக் கட்டுப்படுத்துவதற்காகவும் சென்னை மத்திய கோட்டத்திலுள்ள இரு வணிக வரிச் சரகங்களை இரண்டாகப் பிரித்து உதவி ஆணையர் ஒருவரின் தலைமையில் ஒரு புதிய வணிக வரிச் சரகம் ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இப்புதிய வணிக வரிச் சரகத்திற்கென்று ஒரு தணிக்கைப் பிரிவை அமைக்கவும் கருதப்பட்டுள்ளது.

வரி விதிப்பு அதிகாரிகளிடையே பணிச் சுமையைச் சரிசமமாகப் பகிர்ந்தளிப்பதற்காகவும், வரி விதிப்பு வேகத்தையும், வசூல் பணியையும் முடுக்கிவிடுவதற்காகவும், வரி விதிப்புப் பணியிலும், வரி வசூல் பணியிலும் தரமேம்பாடு இருப்பதை உறுதி செய்வதற்காகவும், பணிச்சுமை அதிகமுள்ள வரி விதிப்பு வட்டங்களை இரண்டாகப் பிரித்து, படிப்படியாக புதிய வரி விதிப்பு வட்டங்களை அமைக்கவும் கருதப்பட்டுள்ளது. 1993-94 ஆம் ஆண்டில் மூன்று வரி விதிப்பு வட்டங்களைப் பிரித்து அவற்றிலிருந்து புதிதாக இரண்டு வரி விதிப்பு வட்டங்கள் ஏற்படுத்தி மொத்தத்தில் வரி விதிப்பு வட்டங்களின் எண்ணிக்கையை மூன்றிலிருந்து ஐந்தாக உயர்த்த கருதப்பட்டுள்ளது. புதிய வட்டங்களில் ஒன்று கோயம்புத்தூர் கோட்டத்திலும் மற்றொன்று சேலம் கோட்டத்திலும் அமைக்கப்படும். 1993-94 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்படவிருக்கும் இப்புதிய வட்டங்களுக்கு ரூ. 9.73 இலட்சம் செலவாகும்.

(ii) மேல்முறையீட்டுப் பிரிவு :

மேல்முறையீட்டுப்பிரிவைப் பொறுத்த வரையில், விற்பனை வரி மேல்முறையீட்டு நடுவர் மன்றத் தலைவரின் ஒட்டுமொத்த கண்காணிப்பின் கீழ் 20 மேல்முறையீட்டு உதவி ஆணையர்கள்

பணியாற்றி வருகிறார்கள். மேல்முறையீட்டு நடுவர் மன்றத் தலைவர் பணி முன்னேற்றத்தை ஆய்வு செய்கிறார். நிர்வாக கண்ணோட்டத்தின் அடிப்படையில் மேல்முறையீடுகளை தீர்வு செய்வது தொடர்பான பணி முன்னேற்றம் குறித்து. அரசும் ஆய்வு செய்து வருகிறது. மேல்முறையீட்டுப்பிரிவை வலுப் படுத்தும் நோக்கத்துடனும் பெருமளவுள்ள அதிகப்படியானவேலைப் பளுவைச் சமாளிப்பதற்காகவும் 1992-93-ஆம் ஆண்டில் தேவை யான துணைப் பணியாளர்களுடன் 2 மேல்முறையீட்டு கூடுதல் உதவி ஆணையாளர் பதவிகள் சென்னை நகருக்காக ஏற்படுத்தப் பட்டுள்ளன.

## தமிழ்நாடு வரி விதிப்பு சிறப்பு நடுவர் மன்றம் அமைத்தல் :

தற்போது பல்வேறு வரி விதிப்புச் சட்டங்களின் கீழ் விதிக்கப் பட்ட பல கோடி ரூபாய் வரி சம்பந்தப்பட்ட வழக்குகள் சென்னை உயர்நீதி மன்றத்தில் தீர்ப்பு வழங்கப்படாமல் உள்ளன. இவ்வழக்குகள் நிலுவையில் உள்ளவரை இத்தொகையும் பயன் படுத்தமுடியாமல் முடங்கியிருக்கிறது. இவ்வழக்குகளை விரைவாக தீர்வு செய்து அதன் மூலம் அரசுக்குச் சேர வேண்டிய பெருமளவிலான வரிபாக்கி தொகையை வசூலிக்கும் பொருட்டு "தமிழ்நாடு வரி விதிப்பு சிறப்பு நடுவர் மன்றம்" ஒன்று ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. "தமிழ்நாடு 1992-ஆம் ஆண்டு வரி விதிப்பு சிறப்பு நடுவர் மன்றச்சட்டம்" என்ற ஒரு சட்டத்தை அரசு இதற்காக இயற்றியுள்ளது. இதுவரையில் உயர்நீதிமன்றம் விசாரித்து வந்த வழக்குகளை இனிமேல் இந்த சிறப்பு நடுவர் மன்றப் விசாரிக்கும். தொடக்கத்தில் தமிழ் நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனைவரிச் சட்டம், தமிழ் நாடு 1970-ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டம், தமிழ் நாடு 1971-ஆம் ஆண்டு விற்பனை வரி (மேல்வரி) சட்டம் ஆகிய சட்டங்களின் கீழ் வரும் வணிக வரி வழக்குகளை மட்டும் இந்த சிறப்பு நடுவர் மன்றம் விசாரிக்கும்.

" தமிழ் நாடு வரி விதிப்பு சிறப்பு நடுவர் மன்றம் (நடை-முறைகள்) விதிகள் ", " தமிழ்நாடு வரி விதிப்பு சிறப்பு நடுவர் மன்றம் (தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர் ஆகியோரின் ஊதியம், படிகள் மற்றும் பணி நிபந்தனைகள்) விதிகள் " மற்றும் " தமிழ்நாடு வரிவிதிப்பு சிறப்பு நடுவர் மன்றப் பணி விதிகள் " ஆகியவற்றை இயற்றுவது குறித்து நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. நிர்வாக ஏற்பாடுகள் முழுமையடைந்ததும், சிறப்பு நடுவர் மன்றம் விரைவில் அமைக்கப்படும்.

## (iii) செயலாக்கப் பிரிவு :

இந்த மாநிலத்தில் நான்கு செயலாக்கப் பிரிவுகள் உள்ளன. சென்னையிலுள்ள செயலாக்கப் பிரிவு வணிக வரிகள் இணை



ஆணையாளர் தலைமையின்கீழ் செயல்பட்டு வருகின்றது. மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களி லுள்ள செயலாக்கப் பிரிவுகள் துணை ஆணையாளர் தலைமையில் செயல்பட்டு வருகின்றன. சோதனைச் சாவடிகளும் இணை துணை ஆணையாளர்கள் (செயலாக்கம்) கட்டுப்பாட்டின்கீழ் உள்ளன. தமிழ்நாட்டில் தற்போது 48 வணிக வரி சோதனைச் சாவடிகள் இயங்கி வருகின்றன. அவற்றுள் 19 மாநில எல்லை யோரச் சோதனைச் சாவடிகளாகும். அவற்றில் 15 சோதனைச் சாவடிகள் நிரந்தரமான அரசு கட்டிடங்களிலும் ஏனைய சோதனைச் சாவடிகள், தனியார் கட்டிடங்களில் அல்லது புறம்போக்கு நிலத்தில் அமைக்கப்பட்ட கொட்டகைகளில் செயல் படுகின்றன. 1993-94ஆம் ஆண்டில் பண்ணாரி சோதனைச் சாவடிக்கு ரூ. 3.70 இலட்சம் செலவில் அங்கு தகுந்த நிலம் உள்ளதால் நிரந்தர கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஏனைய சோதனைச் சாவடிகளுக்கும் தகுந்த இடங்களில் நிலங்கள். தெரிந்தெடுக்கப்பட்டு கட்டிடம் கட்ட முயற்சி எடுக்கப் பட்டுள்ளது.

மொத்தமுள்ள 48 சோதனைச் சாவடிகளில் 20 பெரிய சோதனைச் சாவடிகளாகும், அவற்றுள் பூவிருந்தவல்லி, ஓசூர், கந்திகவுண்டன் சாவடி, இராணிப்பேட்டை ஆகிய இடங் களிலுள்ள நான்கு சோதனைச் சாவடிகளும் இருவழிச் சோதனைச் சாவடிகளாகும். சோதனைச் சாவடிகளில், போக்குவரத்து தடையின்றி செல்லவும், விரைவான தணிக்கையையும் கருத்தில் கொண்டு ஒரு நாளைக்கு 1,000 வண்டிகளுக்கு மேல் கடந்து செல்லும் சோதனைச் சாவடிகளில் படிப்படியாக இருவழிச் சோதனைச் சாவடிகள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. கணியூர் (கருமத்தம்பட்டி) சோதனைச் சாவடி வழியாக சராசரி 1,200 வண்டிகளுக்கு மேல் கடந்து செல்வ தால் 1993-94ஆம் ஆண்டில் தேவையான சார்பு பணியாளர்களு டன் " வெளி வழி "(out going) சோதனைச் சாவடி அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சோதனைச் சாவடிகள் வழியாகச் செல்லாத வாகனங்களை இடைமறித்து சோதனை செய்ய ரோந்துப் படைகள் உள்ளன. 1992-93ஆம் ஆண்டில், ரோந்துப் படைகளைப் பலப்படுத்த இரண்டு துணை வணிக வரி அலுவலர் மற்றும் ஐந்து உதவி. வணிக வரி அலுவலர் பதவிகள் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டன. வரி ஏய்ப்பு மிகுந்த இனங்களில், ஒளிவு மறைவாக சரக்குகளை கொண்டு செல்லும் வாகனங்களைச் சோதனை செய்து வரி ஏய்ப்பினை தடுக்கவும், அதன் மூலம் அரசின் வருவாயைப் பெருக் கவும், 1993-94ஆம் ஆண்டில் சென்னை செயலாக்கப் பிரிவில் திருவள்ளூர், பூவிருந்தவல்லி மற்றும் செங்கல்பட்டு ஆகிய தலைமை இடங்களில் மூன்று ரோந்துப் படைகளை ஏற்படுத்தவும், ஒவ்வொரு படைக்கும் ஒரு துணை வணிக வரி அலுவலர், இரு உதவி வணிக வரி அலுவலர்கள், ஓட்டுநர் ஒருவர் என்ற வீதத்தில் பணியாளர் பதவிகளை ஏற்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளன.

மேலும் மதுரை செயலாக்கப் பிரிவில் காரைக்குடி மற்றும் நாகர் கோவிலில் உள்ள ரோந்துப் படைகளை பலப்படுத்த ஒரே சீரான பணியாளரமைப்பு இருக்கும் வகையில் ஒவ்வொன்றிற்கும் ஒரு துணை வணிக வரி அலுவலர் என்ற வீதத்தில் இரண்டு பணியிடம் தோற்றுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

செயலாக்கப் பிரிவுகளிலுள்ள தகவல் தொடர்பு வசதிகளைப் வலுப்படுத்துவதும், துறையை நவீனப்படுத்துவதும் அரசின் கொள்கையின் ஒரு பகுதியாகும். இதனடிப்படையில், மூன்று பெரிய சோதனைச் சாவடிகளிலும், நான்கு சிறிய சோதனைச் சாவடிகளிலும், சென்னையிலும் அதனைச் சுற்றிலும் உள்ள 14 நடமாடும் பிரிவுகளிலும், கம்பியில்லாத் தந்தி அமைப்பை நிறுவி கிரீம்ஸ் சாலை கட்டிடத்திலுள்ள மையத்துடன் (Central unit) அவற்றை இணைக்க ரூ. 6.50 இலட்சம் செலவில் சாதனங்கள் அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. மேற்படி கம்பியில்லாத் தந்தி அமைப்பு தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தினால் அமைக்கப் பட்டுள்ளது. இது 1993 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 2 ஆம் நாள் முதல் இயங்கி வருகிறது.

(iv) தணிக்கைப் பிரிவு :

வரி விதிப்பு மற்றும் வரி வசூல் ஆகியவற்றில் காணப்படும் குறைகளை மாநிலக் கணக்காய்வுத் தலைவரின் தணிக்கைக்கு முன்னதாகவே கண்டறிந்து துறை ஆய்வு மூலம் குறைகளை சீர் செய்ய வேண்டியதின் அவசியத்தை வணிகவரித் துறை உணர்ந் துள்ளது. தற்போது 40 துறைத் தணிக்கைக் குழுக்கள் உள்ளன. இவை, சம்பந்தப்பட்ட துணை ஆணையர்கள் வகுக்கும் செயல் திட்டங்களின் அடிப்படையில் செயல்படுகின்றன. துறைத் தலைமை அலுவலகத்தில், மாநில கணக்காய்வுத் தலைவரின் தணிக்கை அறிக்கை மற்றும் அவற்றின் மீதான குறைகளையும் பணி ! ஆகியவை, வணிக வரி ஆணையரின் கீழ் ஒரு இணை ஆணையரைக்கொண்ட தனிக்குழுவினால் கவனிக்கப்படுகின்றன. இக்குழு தணிக்கை ஆய்வுரையின் அடிப்படையில் கண்டுபிடிக்கப் பட்ட வருவாய் இழப்பை ஈடு செய்ய நடவடிக்கை எடுத்தல், தவறிழைத்த அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல் ஆகிய பணிகளிலும் ஈடுபட்டுள்ளது. ஒவ்வொரு காலாண்டிலும் செய்யப்படும் வரி விதிப்பு மற்றும் வசூல் பணிகள் அடுத்த காலாண்டிலேயே துறைத் தணிக்கையால் எடுத்துக்கொள்ளப்படு கின்றன. துறைத் தணிக்கைக்குழுவின் அறிக்கை மீதான குறை நிவர்த்தி நடவடிக்கையை, குறைகள் முற்றிலுமாக நிவர்த்தி செய்யப்படும் வரையில் மாவட்ட உதவி ஆணையர் களால் கண்காணிக்கப்படுகின்றன. மாநிலக் கணக்காய்வுத் தலைவரால் எழுப்பப்படும் முக்கிய தணிக்கைப் பத்திகள் மற்றும் துறைத் தணிக்கைக் குழுவின் முக்கிய தணிக்கைக் குறிப்புகள் ஆகியவை வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் உள்ள தணிக்கைப் பிரிவால் கண்காணிக்கப்படுகின்றன. துறைத் தணிக் கைப் பிரிவின் செயல்பாட்டினை மேம்படுத்த அவர்களின் பணி,



தகுந்த கால இடைவெளியில் ஆய்வு செய்யப்படுகிறது. மேலும் நீதிமன்றங்களின் சமீபகால தீர்ப்புகள், அவை குறித்த விளக் கங்கள், சுற்றறிக்கைகளாகவும், செய்தித் தொகுப்புகளாகவும் வெளியிடப்பட்டு அவை வணிகவரி ஆணையர் அலுவலகதி லிருந்து அவர்களுக்கு அனுப்பப்படுகின்றன.

4. கட்டிடங்கள், வணிகவரி அலுவலகங்களுக்கு அரசுக் கட்டிடங்கள் கட்டுதல் :

வணிகவரித் துறை அலுவலகங்கள் அனைத்தும் அரசுக் கட்டி டத்தில் இயங்க வேண்டும் என்பதே அரசின் கொள்கையாகும். தற்போது அனைத்து துணை ஆணையர் அலுவலகங்களும் அரசின் சொந்தக் கட்டிடங்களில் இயங்குகின்றன. மொத்தமுள்ள 312 வரி மதிப்பீட்டு வட்ட அலுவலகங்களில் 140 அரசின் கட்டிடங் களில் உள்ளன.

கரூரில் உள்ள வணிகவரித் துறை அலுவலகங்களுக்கு ரூ.36.20 இலட்சம் செலவில் புதிய கட்டிடம் சமீபத்தில் கட்டி முடிக்கப் பட்டுள்ளது.

சங்ககிரியில் உள்ள வணிகவரித் துறை அலுவலகங்களுக்கு ரூ. 12.10 இலட்சம் செலவில் கட்டிடம் சமீபத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

சென்னை, கிரீம்ஸ் சாலையில் உள்ள வணிகவரி அலுவலகக் கட்டிடத்திற்கு இணைப்புக் கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

1993-94 ஆம் ஆண்டில் வாணியம்பாடி, ஆரணி, ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும், 4 இலட்சம் ரூபாய் செலவில் கட்டிடங் கள் கட்டுவதற்கு மொத்தம் 8 இலட்சம் ரூபாய் அனு மதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள அலுவலகங் களைப் பொறுத்தமட்டில் பொருத்தமான நிலம் தேர்வுசெய்து கையகப்படுத்திய பின்னர் படிப்படியாக அரசுக் கட்டிடங்கள் கட்டப்படும்.

5. வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையம் :

வணிகவரித் துறை, அலுவலர்களின் நிர்வாகத் திறமையை மேம்படுத்தி அவர்களின் செயல்திறனை உயர்த்துவதற்காக, வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையம் நிறுவப்பட்டது. 1982 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இப்பயிற்சி நிலையத்தில் வணிகவரித் துறை அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி நிலையத்திற்கு வணிகவரித் துணை ஆணையர் ஒருவர் தலைவராகவுள்ளார். இவருக்கு வணிக வரி உதவி ஆணையர் இருவரும், வணிகவரி அலுவலர் ஒருவரும் உதவி

புரிகின்றனர். இப்பயிற்சி நிலையம், உதவி வணிக வரி அலுவலர், துணை வணிக வரி அலுவலர், வணிக வரி அலுவலர் ஆகியோருக்கு '' நினைவுகூர் பயிற்சி '' வகுப்புகளை நடத்துகிறது.

இந்நிலையம், பயிற்சி பெறுபவர்களுக்கு பணியிடைப் பயிற்சி அளிப்பதோடு, வணிக வரித் துறையின் நிர்வாகம் சம்பந்தமாக குறிப்பிட்ட தலைப்புகள் குறித்து துறைகளிலுள்ள வல்லுநர்கள் வாயிலாக சிறப்பு விரிவுரைகளுக்கும் ஏற்பாடு செய்கிறது, பயிற்சியின் இறுதியில் அவர்களுக்கு செயல்திற மதிப்பீட்டுத் தேர்வு நடத்தப்படுகிறது. இதுவரை, 597 வணிக வரி அலுவலர்களும் 1,204 துணை வணிக வரி அலுவலர்களும், 1,748 உதவி வணிக வரி அலுவலர்களும் பயிற்சி பெற்றுள்ளார்கள்.

கணிப்பொறி மயமாக்குவதற்காக, பயனுள்ள தகவல் விவரங்களைச் சரியான படிவத்தில் அலுவலர்கள் அனுப்புகின்றனரா என்பதை உறுதி செய்ய அவர்களுக்கு கணிப்பொறி பற்றிய தெளிவும், அனுபவமும் தேவை. எனவே, உதவி ஆணையர் பதவியிலும் அதற்குக்கீழ் பதவியிலும் உள்ள அலுவலர்களுக்கு, கணிப்பொறி அடிப்படைப் பயிற்சி, சென்ற ஆண்டு முதல் படிப்படியாக அளிக்கப்பட்டு வருகிறது. இதுவரை 60 உதவி ஆணையர்களுக்கும், 117 வணிக வரி அலுவலர்களுக்கும் கணிப்பொறியில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகரிலுள்ள வணிக வரி இணை ஆணையர்களுக்கும் துணை ஆணையர்களுக்கும் சிறப்பு ஆணையர் மற்றும் வணிகவரி ஆணையரால் நினைவூட்டும் பயிற்சி நடத்தப்பட்டுள்ளது.

## 6. கணிப்பொறி மையம் :

சேகரித்து சேமித்துவைத்த தகவல்களை மீண்டும் பெற்று, சரி பார்த்து நடைமுறைப் படுத்தி, பாதுகாத்து வைக்கும் பொருட்டு, வணிக வரித் துறை பின்வரும் தகவல்களைக் கணிப்பொறி மயமாக்கும் திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.

(அ) மாநிலத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து வணிகர்களின் விவரங்கள் அடங்கிய புத்தகம்,

(ஆ) மாதாந்திர பொருள்வாரியான மொத்த வியாபாரத் தொகையும் வருவாயும்,

(இ) சோதனைச் சாவடிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட தகவல்களைத் தொகுத்தல்,

(ஈ) வெவ்வேறு பொருட்களைப் பொறுத்தவரையில் பொருள் வாரியான மொத்த வியாபாரத் தொகையும், வருவாயும்,



(உ) சென்னை சுங்க வரித்துறையிலிருந்து சேகரிக்கப்பட்ட இறக்குமதி விவரங்கள் கணிப்பொறியில் வகைப்படுத்தப்பட்டு, செயலாக்கப் பிரிவு பயன்படுத்தும் வகையில் தகவல்கள் தயாரிக்கப்படுகின்றன.

(ஊ) சுயவரி மதிப்பீட்டுக்காகத் தகுதியுள்ள வரி விதிக்கப் படுவோரிடமிருந்து கணக்குகளை விரிவாகச் சோதனையிடுவதற் காக, அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இனங்கள்

(எ) ஒவ்வொரு வணிகவரி கோட்டத்திலிருந்தும் மிக அதிக அளவு வரி விதிப்பிற்குள்ளான வரி விதிக்கப்பட்டவர்கள் 100 பேர்களிடமிருந்து கிடைத்த வருவாய் பற்றிய விவரங்கள்.

(எ) திரையரங்கு வாரியான விவரப்புத்தகம்.

(ஏ) வணிகவரித் துறை அலுவலர்களின் பணி குறித்த விவரங்கள்

இத்துறையின் கணிப்பொறி மையம், 286 '' சிப்ஸ் '' கொண்ட விப்ரோ கணிப்பொறி அமைப்பை கொண்டுள்ளது. இந்த 286 சிப்ஸ் கொண்ட அமைப்பு இத்துறையின் வேலையின் அளவையும் வேகத்தையும் நிறைவு செய்யப் போதுமானதாயில்லாததால் உள்ளது. எனவே, பணிகளை வேகமாகச் செய்யவும், கணிப்பொறியின் திறனை உயர்த்தவும், 1993-94 ஆம் ஆண்டில் ரூ. 35 இலட்சம் செலவில், தற்போது உள்ள 286 சிப்ஸ் கொண்ட அமைப்பை 486 சிப்ஸ் கொண்ட அமைப்பாக மேம்படுத்தவும், உரிய உபகரணங்களை அமைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## 7. வணிகர் நல வாரியம் :

வணிகர்களுக்கு நிதியுதவி அளிப்பதற்காக, வணிகர் நல வாரியம் ஒன்றை அமைத்து அதற்கு அரசு, இரண்டு கோடி ரூபாய் உதவித் தொகை அளித்துள்ளது. இந்த வாரியத்தின் தலைவர் , முதலமைச்சராவார். தலைவர், துணைத் தலைவர் ஆகியோரைத் தவிர, அலுவலர்கள், அலுவலர்கள் அல்லாதோர் ஆகியோரையும்இந்தவாரியம் உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது. 1-3-1993 ஆம் நாள் நிலவரப்படி இவ்வாரியத்தில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை ~~6,080~~ 2557.

## 8. குறை தீர்க்கும் பிரிவு :

வணிகர்கள், தங்கள் குறைகளை எடுத்துரைப்பதற்குரிய ஓர் அமைப்பாகத் திகழ, 1984 ஆம் ஆண்டில் குறை தீர்க்கும் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. இப்பிரிவு, இணை ஆணையாளரைத்

(நிருவாகம்) தலைவராகவும், இணை ஆணையாளரையும் (மக்கள் தொடர்பு) உதவி ஆணையாளரையும் (வணிகவரி-II) உறுப்பினர்களாகவும் கொண்டுள்ளது.

## 9. விற்பனை வரி ஆலோசனைக் குழு :

விற்பனை வரி நிருவாகம் குறித்து பொது மக்களின் கருத்தை அறிய உதவும் வகையில், கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்ள அமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்குடன், அரசு மாநில அளவிலும் மாவட்டங்கள் அளவிலும் வணிகவரி ஆலோசனைக் குழுக்களை அமைத்துள்ளது. மாவட்ட ஆலோசனைக் குழுக்களுக்கு, அந்தந்த மாவட்ட ஆட்சியர்களே தலைவர்களாவர். இக்குழுக்கள், அலுவலர்களையும், வாணிபக் கழகங்கள், வர்த்தகச் சங்கங்கள், கூட்டுறவுகள், வேளாண்மை நிறுவனங்கள் ஆகியவற்றின் அலுவலர் அல்லா பிரதிநிதிகளையும் உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது. வணிகவரிச் சட்டங்களினால் வர்த்தகத் துறையில் எழும் பல்வேறு வணிகப்பிரச்சினைகள், விற்பனை வரிச்சட்டங்கள், விதிகள் ஆகியவற்றை நிருவகிப்பது தொடர்பான விஷயங்களை இக்குழு பரிசீலிக்கிறது. நிருவாகத்தை மேம்படுத்தவும் வணிகர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்கவும் இக்குழுக்களின் தீர்மானங்களும், அவை தெரிவிக்கின்ற ஆலோசனைகளும், கருத்தில் கொள்ளப் படுகின்றன.

## 10. மேல் வரி வசூலிலிருந்து உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியமளித்தல் :

உள்ளாட்சி மன்றங்களின் வருவாய் ஆதாரங்களைப் பெருக்கும் பொருட்டு, மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிகள், சிறப்பு நிலை நகராட்சிகள், பிற நகராட்சிகள், பேரூராட்சிகள், நகரியங்கள் ஆகியவற்றில் ஒவ்வொராண்டும் வசூலிக்கப்படும் விற்பனை வரி மீதான மேல்வரியில் 20 சதவீதத் தொகை மக்கள் தொகையின் அடிப்படையில் அந்தந்த உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியமாக வழங்கப்படுகின்றது. அதைப் போன்று சென்னை மாநகர எல்லைக்குள் வசூலிக்கப்படும் விற்பனை வரி மீதான மேல்வரியின் 50 சதவீதத் தொகை, சென்னை மாநகராட்சிக்கு மானியமாக வழங்கப்படுகிறது.

## 11. உயர்மட்ட விற்பனை வரி சீராய்வு ஆலோசனைக் குழு:

ஒரு நீண்ட கால பயன்கருதி, பரந்த அடிப்படையிலான உயர்மட்ட விற்பனை வரிச் சீர்திருத்தக் குழு ஒன்று சிறந்த வல்லுநர்களைக் கொண்டு திரு. பி. விஜயராகவன், இ.ஆ.ப., தலைமையில்



வரிச் சீராய்வு ஆலோசனை வழங்க அமைக்கப்பட்டது. வரி விகிதங்கள் மற்றும் தற்போது உள்ள வரிவிதிப்பு அம்சங்களைத் தீவிரமாக ஆய்வு செய்து ஒரு திடமான மற்றும் சமச் சீரான வரி விதிப்பு முறை குறித்து இக்குழு ஆய்வு செய்துள்ளது. இக்குழு பல்வேறு வணிக சங்கங்களின் முறையீடுகளைக் கேட்டறிந்து அரசுக்கு அறிக்கையை தந்தது. அவ்வறிக்கையை ஆய்வு செய்து அரசு வரிவிகிதங்களின் எண்ணிக்கையை 17லிருந்து 9ஆகக் குறைத்துள்ளது. இது நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு நிதி அமைச்சர் குறிப்பிட்டது போல் 1959-க்குப் பின் செய்யப்பட்ட துணிச்சலான வரிச் சீர்திருத்தமாகும்.

வரிவிகிதங்கள் மாற்றி அமைக்கப்பட்டுள்ள விவரங்கள் பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

## 12. வருவாய் வசூலில் காணப்படும் போக்கு :

வணிகவரித்துறையின், பல்வேறு சட்டங்களின் கீழ் வசூலிக்கப்பட்ட தொகை குறித்த விவரம் வருமாறு :—

(அ) தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம் :

1988-89 முதல் 1992-93ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு பொது விற்பனைவரிச் சட்டத்தின் கீழ் வசூலிக்கப்பட்ட வருவாய் பற்றிய விவரம் வருமாறு :—

| நிதி ஆண்டு. | மொத்த வரவு. |
|---|---|
| (1) | (2) |
| | (ரூபாய் கோடியில்) |
| 1988-89 | 1,218,86 |
| 1989-90 | 1,426.04 |
| 1990-91 | 1,779.03 |
| 1991-92 | 2,130.27 |
| 1992-93 (28-2-93 வரை) | 2,274,26 |

**(ஆ) 1956ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம்:**

1956ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் 1988–89 முதல் 1992–93 வரையிலான கால அளவில் வசூலிக்கப்பட்ட வருவாய் பற்றிய விவரம் வருமாறு:—

| நிதி ஆண்டு. | மொத்த வரவு |
|---|---|
| (1) | (2) |
| | (ரூபாய் கோடியில்.) |
| 1988–89 | 2,13.00 |
| 1989–90 | 2,40.04 |
| 1990–91 | 2,76.07 |
| 1991–92 | 3,29.84 |
| 1992–93 (28–2–1993 வரை). | 3,30.54 |

(இ) தமிழ்நாடு 1939ஆம் ஆண்டு கேளிக்கைகள் வரிச்சட்டம் மற்றும் தமிழ்நாடு 1961ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச்சட்டம் :

1988–89 முதல் 1992–93 வரையிலான கால அளவில் மேற்சொன்ன சட்டங்களின் கீழ்வசூலிக்கப்பட்ட வருவாய் பற்றிய விவரம் வருமாறு :—

| நிதி ஆண்டு. | மொத்த வரவு. |
|---|---|
| (1) | (2) |
| | (ரூபாய் கோடியில்.) |
| 1988–89 | 63.21 |
| 1989–90 | 68.64 |
| 1990–91 | 69.62 |
| 1991–92 | 68.56 |
| 1992–93 (28–2–1993 வரை). | 69.08 |



**(ஈ) தமிழ்நாடு 1935ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டம் :**

1988–89 முதல் 1992–93 வரையிலான கால அளவில் மேற்சொன்ன சட்டத்தின் கீழ் வசூலிக்கப்பட்ட வருவாய் பற்றி விவரம் வருமாறு :—

| நிதி ஆண்டு. | மொத்த வரவு. |
|---|---|
| (1) | (2) |
| | (ரூபாய் கோடியில்) |
| 1988–89 | 4.72 |
| 1989–90 | 5.70 |
| 1990–91 | 5.66 |
| 1991–92 | 4.67 |
| 1992–93 (28–2–1993 வரை). | 4.67 |

**(உ) தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு ஓட்டல்கள் தங்கும் விடுதிகள் ஆகியவற்றில் அளிக்கப்படும் ஆடம்பர வசதிகள் மீதான வரி விதிப்புச் சட்டம் :**

1988–89 முதல் 1992–93 வரையிலான கால அளவில் மேற்சொன்ன சட்டத்தின் கீழ் வசூலிக்கப்பட்ட வருவாய் பற்றிய விவரம் வருமாறு :

| நிதி ஆண்டு. | மொத்த வருவாய். |
|---|---|
| (1) | (2) |
| | (ரூபாய் கோடியில்) |
| 1988–89 | 2.87 |
| 1989–90 | 17.98 |
| 1990–91 | 17.04 |
| 1991–92 | 17.46 |
| 1992–93 (28–2–1993 வரை). | 20.13 |

**(ஊ) தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு விளம்பர வரிச் சட்டம்:**

திரையரங்குகளில் கண்ணாடிவில்லை மூலம் செய்யப்படும் விளம்பரங்களுக்கு சென்ற ஆண்டு விளம்பர வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது.

1988-89 முதல் 1992-93 வரையிலான கால அளவில் இச்சட்டத்தின் கீழ் வசூலிக்கப்பட்ட வருவாய் பற்றிய விவரம் வருமாறு :—

| நிதி ஆண்டு. (1) | மொத்த வரவு. (2) |
|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1988-89 | 7.44 |
| 1989-90 | 6.89 |
| 1990-91 | 7.00 |
| 1991-92 | 6.00 |
| 1992-93 (28-2-1993 வரை). | 5.00 |

**(எ) தமிழ்நாடு 1990ஆம் ஆண்டு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவின் மீதான வரிச்சட்டம் :**

இச்சட்டம் 1990ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 20ஆம் நாள் முதல் செயலுக்கு வந்தது. 1989-90 முதல் 1992-93 வரையிலான காலஅளவில் இச்சட்டத்தின் கீழ் வசூலிக்கப்பட்ட வருவாய் விவரம் வருமாறு :

| நிதி ஆண்டு (1) | மொத்த வரவு. (2) |
|---|---|
| | (ரூபாய் கோடியில்) |
| 1989-90 | 0.55 |
| 1990-91 | 19.67 |
| 1991-92 | 24.84 |
| 1992-93 (28-2-1993 வரை). | 37.82 |

எஸ். டி. சோமசுந்தரம்
வருவாய்த்துறை அமைச்சர்



**பிற்சேர்க்கை**

**1993-94 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள வரி விகித மாற்றங்கள்:**

| பொருளின் பெயர். | தற்போதுள்ள வரி விகிதம். (சதவிகிதம்) | புதிய வரி விகிதம். (சதவிகிதம்) |
|---|---|---|
| மஞ்சள் | 4 | 3 |
| மிளகாய் | 4 | 3 |
| தனியா | 4 | 3 |
| சீயக்காய் | 4 | 3 |
| புளி | 4 | 3 |
| மிளகு | 4 | 3 |
| வெல்லம் | 6 | 3 |
| வனஸ்பதி | 8 | 5 |
| கடலை எண்ணெய் | 4 | 3 |
| தேங்காய் எண்ணெய் | 4 | 3 |
| நல்லெண்ணெய் | 4 | 3 |
| சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் | 4 | 3 |
| கோதுமைப்பொருட்கள் | 4 | 3 |
| மண்ணெண்ணெய் | 4 | 3 |
| காப்பிக்கொட்டை | 6 | 5 |
| காப்பிப்பொடி | 6 | 5 |
| உடனடித் தேயிலை | 6 | 5 |
| கசகசா | 8 | 5 |
| ஜாதிக்காய் | 8 | 5 |
| சீரகம் | 6 | 5 |
| கையினால் செய்யப்பட்ட சோப்பு | 4 | 3 |
| மருந்தும் மருந்துப் பொருட்களும் | 6 | 5 |
| பிளாஸ்டிக் பொருட்கள் | 6 | 5 |
| அலுமினியப் பாத்திரங்கள் | 4 | 3 |
| செங்கல் | 4 | 3 |
| உலர் மின் கலங்கள் | 9 | 8 |
| சாக்குகள் | 5 | 3 |
| இரத்த வழங்கு அமைப்பு (Blood donor set) | 8 | 5 |
| இரத்தக் குழாய் அமைப்பு (Intravenous set) | 8 | 5 |
| அறுவை சிகிச்சை கருவிகள் (Surgical Instrument) | 10 | 5 |

| பொருளின் பெயர். | தற்போதுள்ள வரி விகிதம். (சதவிகிதம்) | புதிய வ[illegible] விகிதம். (சதவிகிதம் |
|---|---|---|
| கருவிகள் | 10 | 8 |
| இயக்கிகள் | 10 | 8 |
| கச்சாப் படச் சுருள்கள் (திரைப்படம்) | 6 | 5 |
| பருத்தி கழிவுப் பொருள் | 6 | 5 |
| இணைப்பு குழாய் இணைப்புகள் | 10 | 8 |
| மோட்டார் வாகன சக்கரப் பட்டைகளும், குழாய்களும். (Tyres ard Tubes) | 9 | 8 |
| விசைப் பொறிகள் | 10 | 8 |
| இணைப்புக் கம்பிகளும் எலெக்ரோடும் (Welding Electrodes & Rods) | 10 | 8 |
| சணல் கயிறு | 8 | 3 |

<u>வரிவிகிதம் உயர்த்தப்பட்டுள்ள பொருள்களில் பின் வரும்</u>
<u>பொருள்களும் அடங்கும்:</u> —

| பொருளின் பெயர். | தற்போதுள்ள வரி விகிதம். | புதிய வரி விகித |
|---|---|---|
| குளிர் பதனப் பெட்டிகள் | 15 | 16 |
| தரை மற்றும் சுவர் ஓடுகள் | 15 | 16 |
| மின் உயர்த்திகள் | 15 | 16 |
| சலவைக்கல், சலவைக்கல் பொருட்கள் | 15 | 16 |
| வைரங்கள் | 10 | 12 |
| வாசனைப் பொருட்கள் (Scent and Perfumes) | 15 | 16 |
| வண்ணங்கள், வண்ணப் பொருட்கள். (Paints and Distempers) | 10 | 12 |
| காற்று சுத்திகரிப்புக் கருவிகள் (Air Purifiers) | 15 | 16 |
| குளிர்சாதன கருவிகள் (Air Conditioners) | 15 | 16 |
| பீங்கான் பொருட்கள் | 10 | 12 |
| விரிப்புகள் | 15 | 16 |
| தந்தப் பொருட்கள், தந்தத்தால் இழைக்கப்பட்ட பொருட்கள். | 10 | 12 |
| மோட்டார் சிருந்து | 5 | 8 |
| துப்பாக்கிகளும், சுழல் கைத் துப்பாக்கிகளும். | 15 | 16 |
| படிவப் பெருக்கும் கருவிகள் | 15 | 16 |
| பெட்ரோல் | 18 | 20 |